# வரலாற்று ஒளியில் ஸஹாபா தாய்மார்-2

## 4. அகபாவில் (பைஅத்து) உடன்படிக்கை செய்தோர்.

1. நுஸைபா பின்த் கஅப் அல் மாஸினிய்யா (ரலியல்லாஹு அன்ஹா) (உம்மு உமாரா)

2. அஸ்மா பின்த் அம்ர் (ரலியல்லாஹு அனஹு)

( நுபவ்வத் 11வது வருடம் அகபாவில் 6 பேரும் நுபவ்வத் 12வது வருடம் 12 பேரும் கலந்து கொண்டு பைஅத் செய்தனர். இந்த பன்னிருவரில் இருவரே பெண்கள்)

## 5. மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தோர்

1. உம்மு குல்தூம் பின்த் உக்பா (ரலியல்லாஹு அனஹு) (இவரே முதன்முதலாக தன்னந்தனியாக மதீனாவுக்கு ஹிஜரத் சென்றவர்)

2. ஸம்ரா பின்த் நுஹைக் (ரலியல்லாஹு அனஹு) (இவர் சாட்டையை சுழற்றிக்கொண்டே ஒழுக்கம் போதிப்பவராகவிலங்கினார்

3. அஸ்மா பின்த் அபீபக்ர். (ரலியல்லாஹு அனஹு) (தாதுந்நிதாகைன்- இரட்டை வாலைப்பெற்றவர்)

4. உம்மு ஷுரைக் அல் குரைஷிய்யா (ரலியல்லாஹு அன்ஹா), குரஷிகளுக்கிடையே இரகசியமாக இஸ்லாமியப்பிரச்சாரம் செய்து வலுவூட்டிக்கொண்டிருந்தார். இது எவ்வாறோ குரைஷிகளுக்குத்தெரிந்து விடவே பசியாலும் பட்டினியாலும் வாட்டி வதைத்து சுடுமணலிலே பொசுக்கி எடுத்தனர்.

## 6. மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற ஐந்து பாத்திமாக்கள்(ஃபவாதிமுல் கம்ஸா)

**1. பாத்திமா பின்த் ரஸூலில்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கணவர் அலி (ரலியல்லாஹு அன்ஹு)**

**2. பாத்திமா பின்த் அஸத் (ரலியல்லாஹு அன்ஹு) கணவர் அபூ தாலிப்**

**3. பாத்திமா பின்த் ஹம்ஸா (ரலியல்லாஹு அன்ஹு)**

**4. பாத்திமா பின்த் அஸ்ஸுபைர் (ரலியல்லாஹு அன்ஹு)**

**5. பாத்திமா பின்த் அல்ஹாரித் (ரலியல்லாஹு அன்ஹு)**

## 7. மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற மற்றும் சிலர்

**6. பாத்திமா பின்த் அல்கமா (ரலியல்லாஹு அன்ஹு)**

**7. பாத்திமா பின்த் அல்வலீத் (ரலியல்லாஹு அன்ஹு)**

நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் எந்த நாயகத் தோழியரும் நாயகத்தோழர் எவரையும் தாங்களும் பங்கேற்காது தனித்து நின்று செயல்பட அனுமதிக்கவே இல்லை. கைகட்டிக்கொண்டு வீட்டைத்தாளிட்டு விட்டு முடமாக இருக்கவில்லை. ஆண்கள் பங்கேற்ற ஒவ்வொரு துறையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

ஈமானிய உறுதியிலும் , அதனால் ஏற்பட்ட கடும் சோதனைகளிலும் , கொடூரமான தண்டனைகளிலும், நாட்டைத்துறந்து செல்ல வேண்டிய கட்டங்களிலும் (ஹிஜ்ரத்துகளிலும்),அழைப்புப்பணிகளிலும், வாளினால் போராட வேண்டிய சூழ்நிலைகளிலும் தங்கள் கணவர் , பிள்ளைகள், குடும்பத்தினர் அனைவருட னும் தோளோடு தோள் கொடுத்து அணிவகுத்து நின்றதை வரலாறு நெடுகிலும் காணலாம்.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**